


**24. 09. 2025**

## தலைப்பு செய்திகள்

1. நாட்டின் பொருளாதாரத்தையும், தனித்துவ அடையாளத்தையும் கலாச்சார ஆற்றலாக வலுப்படுத்த ஒருங்கிணைந்த முயற்சிகளின் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு வழங்கப்பட்டுள்ள நினைவு பரிசுகளின் மின்னணு ஏலத்தில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்க பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

3. தமிழ்நாட்டில் 2021-முதல் 23-ஆம் ஆண்டுகளுக்கான இயல் இசை நாட்டிய பிரிவுகளுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

4. தமிழக அரசு, கலை அறிவியல் கல்லூரிகளில் 881 கௌரவ விரிவுரையாளர்கள் தற்காலிகமாக பணியமர்த்தப்படுவார்கள் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

5. துபாயில் ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் சூப்பர் 4 சுற்றில் இந்தியா இன்றிரவு பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

***********

### குடியரசு தலைவர்

நம் தேச பொருளாதாரத்தையும், தனித்துவ அடையாளத்தையும் கலாச்சார ஆற்றலாக வலுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளின் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் 64ஆவது தேசிய கலை கண்காட்சி நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், பாரம்பரிய கலாச்சாரத்தை செறிவூட்டுதில் ஆற்றல் மிகு தளமாக கலை திகழ்கிறது என்றார்.

கைவினைஞர்களின் உற்பத்தி பொருட்களை முன்னெடுத்து செல்வதற்கான தளமாக இக்கண்காட்சி திகழ்கிறது என்று பாராட்டிய குடியரசு தலைவர் இதன்மூலம் அவர்களின் நிதி ஆதாரமும், நாட்டின் படைப்பாற்றல் பொருளாதாரமும் வலுப்பெறும் என்றார்.

***********

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு வழங்கப்பட்டுள்ள நினைவு பரிசுகளின் மின்னணு ஏலம் தற்போது நடைபெறும் நிலையில் அனைவரும் இதில் ஆர்வத்துடன் பங்கேற்க பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

நம் நாட்டின் கலாச்சாரத்தையும் படைப்பாற்றல் திறனையும் வெளிப்படுத்தும் வகையிலான ஏராளமான கலை பொருட்களுடன் இந்த மின்னணு ஏலம் நடைபெறுவதாக தமது சமூக வலைதள பதிவில் பிரதமர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டு நடைபெறும் மின்னணு ஏலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரத்து 300க்கும் மேற்பட்ட தனித்துவமான பொருட்கள் இடம்பெற்றிருப்பதாகவும் கூறினார்.

மின்னணு ஏலத்தின் மூலம் பெறப்படும் தொகை தூய்மை கங்கை திட்டத்திற்கு செலவிடப்பட உள்ளது.

இணையதளம் மூலமான ஏல விற்பனை வரும் 2ஆம் தேதி நிறைவுக்கு வருகிறது.

***********

.. மியூசிக் ..

சேவை நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு அயராது செயலாற்றி வரும் நிலையில், நாட்டின் எதிர்காலத்தை செமி கண்டெக்டர் துறை மறுவடிவமைப்பது குறித்த சிறப்பு செய்தித்தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. மியூசிக் ..

மின்னணு சாதனங்களின் செயலாக்கத்தை வடிவமைக்கும் மறைமுக மூளையாகவும் நவீன டிஜிட்டல் சக்தியாகவும் செமி கண்டெக்டர் துறை உருவெடுத்து வருகிறது.

2021ஆம் ஆண்டு செமி கண்டெக்டர் இயக்கம் தொடங்கிய நாள்முதல், இது தொடர்பான கனவை கனவாக்கும் தொலைநோக்கு பார்வையுடன் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அரசு சீரிய பணியாற்றி வருகிறது.

புதுதில்லியில் செமிகான் இந்தியா 2025 மாநாட்டில் அண்மையில் உரையாற்றிய பிரதமர், மின்னணு துறையின் வைரங்களாக செமி கண்டெக்டர் நுண் தகடுகள் திகழ்வதாக பெருமிதம் தெரிவித்தார்.

.. பிரதமர் வாய்ஸ் ..

76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான செமிகான் இந்தியா திட்டத்தின் உற்பத்தி சார்ந்த திட்டங்களுக்கு மத்திய அரசு 50 சதவிகித ஆதரவை வழங்கி வருவதோடு, மின்னணு உபகரணங்களை தயாரிக்க 25 சதவிகித ஆதரவை வழங்கி வருகிறது.

வடிவமைப்பு சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் இதற்காக 280 கல்வி நிறுவனங்களையும் 70 ஸ்டார்ட் அப் நிறுவனங்களையும் ஒருங்கிணைத்துள்ளது.

இந்நடவடிக்கைகளால் இந்தியா செமி கண்டெக்டர் துறையில் தற்சார்பு நிலையை நோக்கி வேகமாகவும் வலுவுடனும் வெற்றிநடை போடுகிறது.

இது தொடர்பாக திருப்பூரை சேர்ந்த ஸ்டார்ட் அப் நிறுவனத்தின் ஆலோசகர் ஜெயபிரகாஷ் எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்

.. பயனாளி வாய்ஸ் ..

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் கூற்றுக்கு செமி கண்டெக்டர் சிப் எனப்படும் தகடுகள் உருவாக்கம் பெறும்போது சர்வதேச நாடுகள் நம்முடன் போட்டியிடும் அளவிற்கு நம் நிலை உலக அளவில் உச்சம் பெறும் என்பது உறுதி.

.. மியூசிக் ..

***********

**சரக்கு சேவை வரி**

இந்தியாவின் மறைமுக வரி கட்டமைப்பை எளிதாக்கும் முக்கியமான பங்கை அடுத்த தலைமுறைக்கான சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் பிரதிபலிக்கும் நிலையில் நாட்டின் சுகாதார துறை இதனால் பெரிதும் பயனடைந்துள்ளது.

சுகாதாரம் மற்றும் ஆயுள் காப்பீட்டு பிரீமியங்களில் 18 சதவிகிதமாக இருந்த GST தற்போது முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த வரி ரத்து குறித்து மகிழ்ச்சி தெரிவித்த நாமக்கல்லை சேர்ந்த ஆயுள் காப்பீட்டு முகவர்:

**வாய்ஸ்**

***********

**விருது**

தமிழகத்தில் 2021-22-23 ஆம் ஆண்டுகளுக்கான இயல் இசை நாட்டிய பிரிவுகளுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி பாரதியார் விருது முனைவர் ந.முருகேச பாண்டினுக்கும்,

எம்.எஸ்.சுப்புலெட்சுமி விருது பத்மபூஷன் டாக்டர் கே.ஜே.யேசுதாஸ்,

பால சரஸ்வதி விருது பத்ம ஸ்ரீ முத்து கண்ணம்மாள் உள்ளிட்டோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் பட்டியலில் திரைப்பட நடிகர்கள், எஸ்.ஜே.சூர்யா, சாய்பல்லவி, லிங்குசாமி, உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

2023ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருது திரைப்பட இசையமைப்பாளர் அனிரூத், பின்னனி பாடகி ஸ்வேதா மோகன், நடன இயக்குனர் சாண்டி ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

சென்னை கலைவாணர் அரங்கில் அடுத்த மாதம் நடைபெறும் விழாவில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இவ்விருதுகளை வழங்குவார்.

***********

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் மாணாக்கர் உயர்கல்வியை தொடர்வதன் அவசியத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை கொளத்தூரில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று பேசிய அவர், மாணாக்கரின் கல்விக்கு மாநில அரசு துணை நிற்கும் என்று குறிப்பிட்டார்.

முன்னதாக சென்னை மாநகராட்சி ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய சமையல் கூடம், பல்நோக்கு மைய கட்டிடம், பள்ளி கட்டிடம், விளையாட்டு மைதானத்தை முதலமைச்சர் திறந்துவைத்தார்.

***********

**கோவிசெழியன்**

தமிழகத்தில் அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 881 கௌரவ விரிவுரையாளர்கள் தற்காலிகமாக பணியமர்த்தப்பட உள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

தகுதியுடையோர் அடுத்த மாதம் 8 ஆம் தேதிக்குள் அதற்கான இணையதளத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

***********

**உதயநிதி**

மதுரையில் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதி நவீன ஹாக்கி மைதானம் அமைப்பதற்கான பணிகளை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று ஆய்வு செய்தார்.

இத்திட்ட பணிகள் குறித்து அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

***********

**தூய்மையே சேவை**

நாடுமுழுவதும் தூய்மையே சேவை பணிகள் முழு வீச்சில் நடைபெறும் நிலையில் சென்னை அம்பத்தூர் தலைமை தபால் நிலையம் உள்ளிட்ட பல்வேறு மத்திய அரசு அலுவலகங்களில் தூய்மை பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

இவ்வலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள், குப்பைகள், செடி கொடிகளை அகற்றி தூய்மை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

***********

**நயினார் நாகேந்திரன்**

தமிழ்நாட்டில் வரும் சட்டப்பேரவை தேர்தலுக்கான பரப்புரையை பிஜேபி வரும் 12ஆம் தேதி மதுரையிலிருந்து தொடங்கும் என்று கட்சியின் மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணி கட்சியை சேர்ந்தவர்களும் இதில் பங்கேற்பார்கள் என்றார்.

கட்சியின் தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டா விரைவில் தமிழகம் வர இருப்பதாகவும் திரு.நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டார்.

***********

**கன்னியாகுமரி**

தேசிய உடல் நலம் மற்றும் உடல் தகுதி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

நாடுமுழுவதும் மகளிரின் சுகாதாரம் மற்றும் உடல் நலத்திற்கான இயக்கம் முன்னெடுத்துச்செல்லப்படும் நிலையில் நாகர்கோவிலை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் திருமதி மீனா தேவ் உடல் நலத்தின் முக்கியத்துவம் குறித்து தெரிவிக்கையில்:

**வாய்ஸ்**

***********

**பசுமை தமிழ்நாடு**

**அரியலூர் மாவட்டம் வாரணாசி ஊராட்சியில்** பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் சார்பில் மரம் நடும் விழா இன்று நடைபெற்றது.

மாவட்டத்தின் வனபரப்பை அதிகரிக்கும் வகையில் ஒரே இடத்தில் 500 மரக்கன்றுகள் நடும் பணியை ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தொடங்கிவைத்தார்.

**இதேபோல் காஞ்சிபுரத்தில்** மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், பள்ளி மாணாக்கருடன் இணைந்து, சிறுவள்ளூர் கிராமத்தில் மரக்கன்றுகளை நட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

***********

**இருவரி**

**வேலூர் கோ ஆப்டெக்ஸ் கைத்தறி தீபாவளி** விற்பனையை ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி இன்று தொடங்கிவைத்தார்.

மூன்று கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

**தஞ்சையை ஆட்சி செய்த மராட்டிய மன்னர்** இரண்டாம் சரபோஜியின் 248ஆவது பிறந்த நாளை ஒட்டி அவரது திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

**நாகை மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும்** தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் சீருடை பணியாளர் தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

***********

**கிரிக்கெட்**

துபாயில் ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் சூப்பர் 4 சுற்றில் இந்தியா இன்றிரவு பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**